14
20/1/2022

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6, அவர்களின்

செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),

ந.க.எண்.55150/நிபி8/1/2021 நாள்: 06.01.2022

20 JAN 2022

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி.சே.லதா, (த/பெ. (லேட்) திரு.எஸ்.சேதுமாதவன், பதிவறைஎழுத்தர், அரசு மருத்துவமனை, இலால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்) – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலார் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.
4. அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2009.
5. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.21.04.2017.
6. இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.48337/நிபி8/1/2015, நாள் 23.09.2019.
7. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59250/நி2/2/2019, நாள் 30.09.2019.
8. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021.
9. அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 16.03.2021.
10. திருச்சிராப்பள்ளி மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக கடித ந.க.எண்.4712/நி2/2006, நாள் 10.10.2019.
11. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

-------

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி அரசு மருத்துவமனையில், பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 30.11.2003 அன்று இயற்கையெய்திய

திரு.எஸ்.சேதுமாதவன் என்பவர் 13.04.1974 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 12.04.1975 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 05.06.1955, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.06.2013 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் மகளுமாகிய திருமதி.சே.லதா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி அரசு மருத்துவமனையில், பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 30.11.2003 இயற்கையெய்திய திரு.எஸ்.சேதுமாதவன் என்பவரின் மகளும் வாரிசுதாரருமாகிய திருமதி.சே.லதா (பிறந்த தேதி 26.12.1983) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்ட காசநோய் மையத்தில் 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.சே.லதா என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-8இல் காணும் அரசாணையின்படி, அவர் பணியில் இணைந்த நாளான 09.10.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ். குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்

பெறுநர்
திருமதி.சே.லதா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட காசநோய் மையம், திருச்சி.
-- நலப்பணிகள் இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி மூலமாக.

நகல்
1) நலப்பணிகள் இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி.
2) துணை இயக்குநர் மருத்துவப்பணிகள் (காசநோய்), திருச்சிராப்பள்ளி
3) நிர்வாகப்பிரிவு 2 (2 நகல்கள்)
4) நிர்வாகப்பிரிவு 2 (முதுநிலை)
5) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

10/1/22

இளநிலை நிர்வாக அலுவலர்

7/1/22

10/1/22

3/8